# கைதிகள் 29-ம் திகதி முதல் உண்ணாவிரதம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 8 இதழ் 157
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 23 — 07 — 1993

## உறவினர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் யுத்தக் கைதிகள் 33 பேரும் எதிர்வரும் 29-ம் திகதி வியாழக்கிழமை உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாக யுத்தக் கைதிகளின் உறவினர் தெரிவித்துள்ளனர்.
இதுதொடர்பாக யுத்தக் கைதிகள் 33 பேரும் ஒப்பமிட்டு அரசுக்கு வழங்கிய கடிதத்தை நேற்று மாலை 5 மணி (4-ம் பக்கம் பார்க்க)

## இளம் தமிழ் பெண் சிறையில் சித்திரவதை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இளம் தமிழ் பெண் ஒருவர் கடந்த 10 மாத காலமாக வெலிக்கடைச் சிறையில் கடும் சித்திரவதைகளை அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.
செம்மாந்துறை முகாமைச் (4-ம் பக்கம் பார்க்க)

# அரசியல் தீர்வு இல்லாவிடில்

# நாடு இரண்டாகப் பிளவுபடும்

## முன்னாள் விமானப்படைத் தளபதி எச்சரிக்கை!!

(கொழும்பு)
இலங்கையில் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தை மூலம் துரித நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், நாடு துண்டாடப் படுவதை எவராலும் தடுக்க முடியாது. இவ்வாறு முன்னாள் விமானப்படைத்தளபதி ஹரி குணத்திலக்கா எச்சரிக்கை செய்துள்ளதாக வெரித்தாஸ் வானொலி நேற்று தெரிவித்தது.

இராணுவத்துறைக்கு வழங்கப்படும் குறைந்தளவு நிதி கொண்டு பலம் வாய்ந்த விடுதலைப்புலிகளை அடக்கி ஒடுக்குவது முடியாத காரியம்.
பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஒரு அரசியல் தீர்வு காணப் (4-ம் பக்கம் பார்க்க)

## மீனவர் மீது கடற்படை தாக்கு

(நெல்லியடி)
பருத்தித்துறைக் கடலில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் தாக்குதலால் மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் தமது உடமைகளை இழந்த நிலையில் 13 மணித்தியாலங்கள் கடலில் நீந்தி கரை சேர்ந்தனர்.
இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் பருத்தித்துறை கடற்பரப்பிலுள்ள நாகர் கோவில் கடற்பிரதேசத்தில் இடம் (4-ம் பக்கம் பார்க்க)

## போரைகட்டுப்படுத்தமுடியாது அரசாங்கம் திணறுகிறது!

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு யுத்தத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியாத நிலையில் அரசு உள்ளது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என விமர்சகர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.
இதேவேளையில் 1983ம் ஆண்டு முதல் 1993 ஆண்டு காலத்திலான 10 வருட இடைவெளியில் வடக்கு கிழக்கு யுத்தத்தில் 28 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.
யுத்தத்தைத் தொடருவதா இல்லது பேச்சுவார்த்தை மேற்கொள்வதா என்ற ஒரு முடிவு தெரியாததால் அரசு இரண்டுக்கும் நடுவில் திண்டாடி வருவதே இதற்கு ஒரு காரணமாகும்.
(4ம் பக்கம் பார்க்க)

## விசைப்படகில் ஏற்றப்பட்டனர்

(நெல்லியடி)
மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களை வழிமறித்த ஸ்ரீலங்கா கடற்படையினர் அவர்களை தமது விசைப் படகில் ஏற்றி, சப்பாத்துக் கால்களினால் மிதித்தனர்.
இச்சம்பவம் நேற்றுக்காலை 7-00 மணியளவில் பருத்தித்துறை முனைக்கடலில் இடம் பெற்றது.
(4-ம் பக்கம் பார்க்க)

பூநகரிப் பாதை விவகாரம்:

## ராணுவசோதனையை புலிகள் விரும்பவில்லை - பிரட்மன் வீரக்கோன்

(கொழும்பு)
பூநகரிப் பாதை ஊடாக பொதுமக்கள் பிரயாணம் செய்யும்போது இராணுவ சோதனை நிலையங்கள் அப்பகுதியில் இருப்பதை விடுதலைப்புலிகள் விரும்பவில்லை.
இவ்வாறு ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.
கிளிநொச்சியிலிருந்து பூநகரிப்பாதையூடாக பொதுமக்கள் பாதுகாப்பாக யாழ்ப்பாணத்துக்கு செல்வதற்காக (4-ம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி விஜயத்தினால்

## மனித உரிமைகளை மீறும் வலயமாக மட்டுநகர் மாறுகிறது

(மட்டுநகர்)
ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் மட்டக்களப்பு விஜயத்தினால் மட்டக்களப்பு தற்போது மனித உரிமைகளை மீறும் ஒருவலயமாக மாறி வருவதாக மட்டுநகருக்கு விஜயம் செய்துள்ள பி. பி. சி. நிருபர் கிறாக்காரேரஸ் தெரிவித்துள்ளார்.
மட்டக்களப்பு நகர் தற்போது ஆயுதம் தாங்கிய பொலிசாராலும் இராணுவத்தாலும் நிறைந்து வழிகின்றது. நூற் (4-ம் பக்கம் பார்க்க.

1983 ஜூலை இனக்கலவரம்:

## இன்று 10 ஆண்டுகள் பூர்த்தி

### புலிகள் தாக்கலாமென அரசு அச்சம்

(கொழும்பு)
1983ம் ஆண்டு ஜூலை இனக்கலவரம் ஏற்பட்டு 10 ஆண்டுகள் பூர்த்தியை யொட்டி இன்று கொழும்பில் 'கறுப்பு ஜூலை' தினம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இதன் காரணமாக நகரின் முக்கிய இடங்களில் எல்லாம் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
நாடாளுமன்ற கட்டிடங்கள், அரச அலுவலகங்கள், திணைக்களங்கள் மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் யாவற்றிலும் ஆயு (4ம் பக்கம் பார்க்க)

## 10 ஆண்டு போரினால் நாட்டின் உறுதி குலைவு

(கொழும்பு)
இலங்கையில் கடந்த பத்து ஆண்டுகளாக பெரும்பான்மை சிங்கள இனத்தவர்களுக்கும் சிறுபான்மை தமிழ் இனத்தவர்களுக்குமிடையில் நடைபெற்றுவரும் போராட்டத் (4-ம் பக்கம் பார்க்க)

நெருக்கடிகால சேவையை

## உபயோகிப்போர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)
நெருக்கடிகால யாழ்- வன்னி தொடர்பு சேவையூடாக வியாபார நோக்கத்தை பூர்த்தி செய்யும் முகமாக அமைந்த செய்திகளை அனுப்புபவரும், கையேற்பவரும் தமக்குள் மட்டும் விளங்கிக்கொள்ளக் கூடிய மறைப்புச் சொற்களைப் பிரயோகித்து வழமையான செய்திகள் (4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

கோழித்தீன் அரைக்கும் மெஷின் தேவை. தொடர்பு:- மில்க்வைற்.
(ஏ-3267)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு-5)

ஆண்டு-5 புலமைப் பரீட்சையில் சிறந்த பெறு பேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் புலமைப்பரிசில் மாதிரிவினாத்தாள் 25-07-93 ஞாயிறு வெளியிடப்படும். வகைப்படுத்தப்பட்டு திருத்தி கொடுக்கப்படும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(இ-337)

### விற்பனைக்கு

பாடசாலைப் புத்தகங்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், பாடசாலை உபகரணங்கள், O/L, A/L கடந்தகால வினா விடைகள் மற்றும் விண்ணப்பப்படிவங்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம் தினேஸ் புத்தகசாலை, 19, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(இ-3262)

— பெயர் மாற்றம் —
யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் G.V. Kanesalinkam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்
G.V. Kanesalinkam,
298, காங்கேசன்துறை வீதி,
— யாழ்ப்பாணம். —
(இ 330)

## உதவிக் கல்விப் பணிப்பாளர்

(உடுவில்)

நவாலி கொத்தணி அதிபராகக் கடமையாற்றிய திரு. ஐ. மனோகரன் வேலணைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவிஉயர்வு பெற்றுச் சென்றுள்ளார். -109

## குழாய் நீர் வசதி

(உடுவில்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சமாதானக் கோட்டை கிராம மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் குழாய் கிணறு ஒன்றை மேற்படி பிரதேச சபைஅமைத்துக்கொடுத்துள்ளது. -109

## வர்த்தக வகுப்பு

(தாளையடி)

வடமராட்சி கிழக்குப்பகுதியில் உடுத்துறை மகாவித்தியாலயத்தில் க. பொ. த. உயர்தர வகுப்பில் வர்த்தகப் பிரிவு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இப்பகுதி மாணவர்கள் க. பொ. த. உயர்தர வகுப்பில் வர்த்தக பாடங்களை இங்கேயே பயிலக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. -16

## நல்லைக் கந்தன் கொடிச் சீலை

(திருநெல்வேலி)

பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு செங்குந்தகுல மக்களால் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வரும் கொடிச்சீலை இன்று வெள்ளிக்கிழமை 23-ம் திகதி காலை நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள வேல்முருகன் ஆலயத்திலிருந்து அழகிய தேரில் எடுத்துச் செல்லப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (157)

## இன்று

(திருநெல்வேலி)

விடுதலைப்புலிகளின் கெரில்லாப் பிரிவுத் தலைவன் லெப். செல்லக்கிளி அம்மானின் 10ம் ஆண்டு நினைவுதின நிகழ்ச்சிகள் இன்று 23ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி கிழக்கில் உள்ள காலையம்மன் சனசமூக நிலையத்தினரால் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. (157)

0 0 0

(கொழும்புத்துறை)

கொக்புரம் கொம்படியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் ஆடிப் பூரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டை அடுத்து அம்பாள் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். -154

0 0 0

(கொழும்புத்துறை)

சண்டிலிப்பாய் அங்கணாமைக்கடவை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தானம் வருடாந்த உற்சவம் இன்று 23ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெறும். -154

0 0 0

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய லட்சார்ச்சனை இன்று வெள்ளி காலை ஆடிப் பூர விழாவுடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் 2ம் திகதி முடிவடையும். தினமும் மாலை 6-00மணி தொடக்கம் தமிழருவி த. சிவகுமாரன் "தேவியின் மாதிமியம்" என்னும் பொருளில் தெய்வீக உரை நிகழ்த்துவார். 0 0

(மானிப்பாய்)

நவாலி கலைஓடை கண்ணகை அம்மன் ஆலயத்தில் இன்று 23ம் திகதி வெள்ளிக்கிழமை ஆடிப்பூர விழா கொண்டாடப்படவுள்ளது.

0 0 0 -71

யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் நடைபெற்றுவரும் ஸ்ரீ துர்க்கை அம்மன் அலங்கார உற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் ஆடிப்பூர ருதுசாந்தி விழாவும் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆசிரம கலை பண்பாட்டு பேரவையினர் தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் உடுப்பிட்டி கீதாலய இசைக்குழுவினராகிய ஆ. இரவீந்திரன் ஆகியோர் சகோதரர்கள் வழங்கும் மெல்லிசை நிகழ்ச்சி இடம்பெற இருக்கின்றன. விழாவுக்கு செ. ஜெகநாதன் தலைமை தாங்குகிறார். -ம

0 0 0

(நெல்லியடி)

அல்வை வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய வருடாந்த ஐந்தாம்நாள் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை விசேட உற்சவத்துடன் சிறப்பாக நடைபெறவுள்ளது

பிற்பகல் 3-30 மணிக்கு அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் 'தாயினும் நல்ல தலைவி' என்னும் பொருளில் உரையாற்றுவார்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணி திருப்பலி திருச்சுருபவனியுடன் முடிவுறும்.

இன்று காலை 9-00மணிமுதல் 12-00மணிவரை நோயாளரை ஆசீர்வதிக்கும் விசேட சடங்கும் இடம்பெறும். (இ)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### விஞ்ஞானமாணி (விவசாயம்) பட்டப்படிப்பு

கல்வியாண்டு 1992/93

மேற்படி பட்டப்படிப்பு அனுமதிக்கான விண்ணப்பங்கள் தகுதியுடையவர்களிடமிருந்து என்னை 1993 ஆகஸ்ட்மாதம் 16-ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அனுமதிக்கான நிபந்தனைகள்:

1. வயது: விண்ணப்பதாரி 1993 ஆகஸ்ட் 16 ம் திகதியன்று 45 வயதிற்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.
2. கல்வித்தகைமைகள்: க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களில் ஒரே முறையில் குறைந்தது 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

1 தாவரவியல் 2. விலங்கியல் 3. இரசாயனவியல் 4. பௌதிகவியல் 5. விவசாயம்.

அல்லது

பல்கலைக்கழக பீடச்சபையினாலும், மூதவையினாலும் அங்கீகரிக்கப்பட்ட பிற கல்வித் தகைமைகள் அத்துடன்

1. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இரண்டு வருடத்திற்குக் குறையாத விவசாய டிப்ளோமா நெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்
2. டிப்புளோமா பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்தபின்னர் விவசாயத்துறையில் 5 வருட அனுபவமும், குறைந்தது நடுத்தர தொழிநுட்ப தரமும் அடைந்திருத்தல் வேண்டும்.
3. பயிற்சிக்காலம்: 4 வருடங்கள்

அனுமதி எழுத்துப் பரீட்சை மூலமும் வாய்மொழிப் பரீட்சை மூலமும் வழங்கப்படும். 1993 செப்ரம்பர் மாதம் நடைபெறவிருக்கும் எழுத்துப் பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளரிடம் இருந்தும் (பரீட்சைக்கிளை) பதில் உதவிப் பதிவாளர் / விவசாயபீடம், கிளிநொச்சி அவர்களிடமிருந்தும் பெறப்படும் மேலதிக விபரங்களுடன் கூடிய விண்ணப்பப் படிவங்களில் மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்துதல் வேண்டும். தபால் மூலமாக விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற்கட்டளையை சுயவிலாசமிடப்பட்ட முத்திரையிடப்பட்ட 23X10 c.m. அளவிலான கடித உறையை அனுப்புதல் வேண்டும். குறித்த விண்ணப்பப்படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவாளர்
(ஏ-3269)

## இராசி பலன்

23-07-1993
வெள்ளிக்கிழமை
(தமிழுக்கு ஆடி 08)

சதுர்த்தி மு. ப. 9-10வரை. பூரம் பி. ப. 1-13 வரை, சித்தயோகம் இராகுகாலம் காலை 10-32 முதல் 12-02 வரை. சுபநேரம் காலை 6-02 முதல் 7-32 வரை. ஆடிப்பூரம்

மேடம்: கடமையுணர்ச்சி, அபிப்பிராயபேதம், நண்பர் தொல்லை.

இடபம்: மனசஞ்சலம், மாமனார் கேடு, பண விரயம்.

மிதுனம்: பெரியோர் அன்பு அந்தரங்க பக்தி, தொழில் ஆர்வம்.

கடகம்: வைராக்கியம், பிறர் துன்பம், பொறுமை இழத்தல்.

சிம்மம்: ஆடம்பர வாழ்வு, வாக்கு வசீகரம், தாயார் உதவி.

கன்னி: பிடிவாத குணம், சகோதர பரிவு, தொழில் நஷ்டம்.

துலாம்: தற்பெருமை, கல்வி ஞானம். புதிய முயற்சி.

விருச்சிகம்: உணர்ச்சிவசப்படல், கடமை தவறுதல், பண வரவு.

தனுசு: அனுகூல தலையீடு, சாமர்த்தியக் குறைவு, கடன் தொல்லை.

மகரம்: வேலைகளில் தயக்கம், காரிய விக்கினம், ஏமாற்றப்படல்.

கும்பம்: கலை ஆர்வம், தொழில் சிறப்பு, விருந்தினர் மகிழ்ச்சி.

மீனம்: வாக்கு தவறுதல், மனைவியின் பெருமை, பிறர் பாராட்டு.

ஜோஸ்யர்

## செயலகம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இதுவரை காலமும் புதிய செம்மணி வீதி, கச்சேரிகாடு (இருபாலைரன் வீதி இல. இயங்கி வந்த போக்குவரத்து கண்காணிப்புபிரிவின் விசாரணைச் செயலகம், பொதுமக்களின் போக்குவரத்து நன்மைகருதி கோண்டாவில் அமைந்துள்ள பிரயாண அனுமதி வழங்கும் விசாரணைச் செயலகத்திற்கு அண்மையில் (புகையிரத நிலையவீதி கோண்டாவில்) இடமாற்றம் செய்யப் பட்டுள்ளது என்பதனைபோக்குவரத்து கண்காணிப்பு பிரிவு பொதுமக்களிற்கு அறியத்தருகின்றது.

---

## சகல அரசாங்க குடும்ப நல உத்தியோகத்தர் கவனத்திற்கு

எமது 19-வது வருடாந்த பொதுக்கூட்டம் 25 07-93 அன்று தவிர்க்கமுடியாத காரணத்தினால் யாழ்/வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறமாட்டாது என்பதையும், அன்றைய தினம் யாழ் நாவலர் பாடசாலையில் (மனோகராத் தியேட்டர் அருகாமை) நடைபெறும் என்பதையும் அறியத் தருகின்றேன்

திருமதி க. அல்பிரட்
கௌரவ செயலாளர்
இணுவில்.

(இ-347)

---

வ
வட்டுக்கோட்டை

## கண்ணகி அம்மன் ஆலய மகா சங்காபிஷேகம்

23-07-93 வெள்ளிக்கிழமை 9-30 மணி

பட்டி மன்றம்

பொருள்: அநீதியை எதிர்த்து நிற்பதில் இன்றைய பெண்ணினம் பின்பற்ற பெரிதும் பொருத்தமானவள்

பாஞ்சாலியே! சீதையே!

நடுவர்: இ. ஜெயராஜ்
(கம்பன் கழகம்)

பரிபாலன சபையும்
தொண்டர் சபையும்.

(சி 349)

---

## 2ம் ஆண்டு நினைவலைகள்



★
மலர்வு:
1932-06-06

உதிர்வு:
1991-07-23
★

### அமரர் த. தருமலிங்கம்

(முன்னாள் மட்டுவில் மகாவித்தியாலய ஆசிரியர்)

அன்பிற்கினிய தந்தையே!

இக்கற்று தடுமாறி நிற்கையிலும், திசைகாட்டும் கலங்கரையாய் நீயொளிர்ந்தாய்! இன்றிங்கு நீயில்லை எமக்கினிப் பசுமையில்லை, ஆண்டு பலவானலும் ஆறாது துயரமிது எந்தன் அப்பா.

உங்கள் பிரிவால் துயருறும்!
குடும்பத்தினர்.

'திருவேரகம்',
சண்முகம் வீதி,
சாவகச்சேரி.

(இ-348)

**மணிவாசகம்**

கண்களை இழந்தவன் குருடனல்ல, எவன் தன்னிடமுள்ள குறைகளை மறைக்கிறானோ அவனே குருடன்''
— மகாத்மா காந்தி

# ஈழத் தமிழ் மக்களின் வாழ்வில்
# மறக்க முடியாத "கறுப்பு ஜூலை"

ஈழத் தமிழர்களுடைய வாழ்வில் மறக்கமுடியாத ஒரு மாதமாக 1983-ம் ஆண்டு ஜூலை மாதம் அமைந்துவிட்டது. இரத்தம் தோய்ந்த, துயர் நிறைந்த அந்த நாளை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. ஈழத் தமிழர்களின் வாழ்வில் அழியா இடத்தைப் பிடித்துவிட்ட அந்த நாள் ஒவ்வொரு வருடமும் நினைவு கூரப்படுகிறது.

தமிழர்களுக்கு எதிராக ஆயுதப்படைகளின் உதவியுடன் சிங்கள இனவெறியர்களால் தென்னிலங்கையில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் சுட்டும், வெட்டியும், உயிருடன் எரித்தும் கொல்லப்பட்டனர். தமிழர்களுக்குச் சொந்தமான கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

தமிழரின் வர்த்தக நிலையங்கள், வீடுகள் உட்பட பல கட்டிடங்கள் இடிக்கப்பட்டன. எரித்து அழிக்கப்பட்டன. கொழும்பு நகரத்தில் மட்டும் 35,000த்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் ஒரே நாளில் அகதிகளாக்கப்பட்டனர்.

தமிழருக்கு என்று ஒரு தனி நாடு அவசியம் என்பதனை வலியுறுத்திய ஜூலை மாதக் கொடூரத்தின் பின்னர் தான் ஈழத்தமிழர் போராட்டம் முனைப்படையத் தொடங்கி இன்று தனிநாட்டிற்கான அங்கீகாரத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறது.

ஜூலை கலவரம் ஆரம்பித்து இன்று பத்து வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அந்தக் கொடிய நாளை நினைவுகூரும் வகையில் கறுப்பு ஜூலை தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்தக் கறுப்பு ஜூலையை நினைவுகூரும் வகையில் ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளில் எதிர்ப்புப் பேரணிகள் மற்றும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன. லண்டன் ட்ரபல்கார் சதுக்கத்தில் நாளை 24-ம் திகதி பெரும் ஆர்ப்பாட்டமும், பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளன.

இதேவேளை எதிர்வரும் இருபத்தேழாம் திகதி மகசீன் சிறைச்சாலையிலுள்ள தமிழ், முஸ்லிம் அரசியல் கைதிகள் துக்கம் அனுஷ்டித்து உபவாசம் இருக்கவுள்ளனர். இதேபோன்று தமிழர் வாழும் பகுதியெல்லாம் இந்த கறுப்பு ஜூலை தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

1983-ம் ஆண்டு ஜூலை மாதம் யாழ்ப்பாணத்திலிடம் பெற்ற நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட 13 இராணுவத்தினரின் சடலங்களும் பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டு 24ம் திகதி கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. கனத்தை மயானத்தில் இடம்பெற்ற இவர்களின் மரணக்கிரியைகளின் பின்னர் சிங்களக் காடையர்களால்

**துரை**

கொழும்பு நகரில் வாழ்ந்த தமிழர்கள் கண்டபடி தாக்கப்பட்டு வகை தொகையின்றிக் கொல்லப்பட்டனர். இதனையடுத்து தென்பகுதி எங்கும் தமிழருக்கு எதிரான கலவரங்கள் அரச படைகளின் உதவியோடு இடம்பெற்றன.

தமிழர்களின் கடைகள் வீடுகளில் புகுந்த சிங்களக் காடையர்கள் அவர்களின் சொத்துக்களைச் சூறையாடிவிட்டு வெட்டியும், சுட்டும், அடித்தும் எரித்தும் கொலை செய்தனர்.

கொழும்பு நகரில் தமிழருக்குச் சொந்தமான 17 கைத்தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டதுடன் ஆயிரக்கணக்கான தமிழர்கள் தமது இருப்பிடங்களிலிருந்து அடித்து விரட்டப்பட்டனர்.

கொழும்பிலும் அதனையடுத்துள்ள பகுதியிலும் தமிழர்கள் பெருமளவு தாக்கப்பட்டதையடுத்து 25-ம் திகதி கொழும்பில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது.

ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்ட பின்னர் தான் 26ம், 27ம் திகதிகளில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் வைத்து குட்டிமணி, தங்கத்துரை உட்பட 52 தமிழ்ப் போராளிகள் வெட்டிக்கொல்லப்பட்டனர்.

சிங்களக் காடையர்களினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனக்கலவரத்தை அடுத்து கொழும்பிலுள்ள தமிழர்கள் வடபகுதியை நோக்கி இடம் பெயர்ந்தார்கள். தமிழர்களுக்கு என்று ஒருசொந்த இடம் தேவை என்பதனை நிரூபிக்க இந்நாள் அரசுக்கு சர்வதேச ரீதியில் கண்டனங்களையும் தமிழர் மீதான அனுதாபத்தையும் ஏற்படுத்தியது.

1956, 1958, 1961, 1977, 1981, ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற கலவரங்களை விட 1983 ஜூலை கலவரம் தான் தமிழர்களின் அரசியல் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்த நாள். எனவே "83 கறுப்பு ஜூலை தினம்" ஒவ்வொரு ஆண்டும் தமிழர்களால் நினைவு கூரப்படவேண்டியது அவசியமாகும்.

## நமது நோக்கு

### ஆடி நினைவுகள்

ஆடி மாதம் என்றாலே எம்மவருக்கு ஒரு தனிப் பயம்! பயங்கர நினைவலைகள் இன்னும் பலரை வாட்டுகின்றன.

1958 வைகாசி - தமிழருக்கு எதிரான கொலை, கொள்ளை, கற்பழிப்புகளுக்கு மாகாண, வட மத்திய மாகாணத் தமிழர்கள் பட்டதுன்பத்தை எவர் மறப்பார்கள்?

1977 ஆவணி — 'ஒரு சிறிய பாடம்' தமிழருக்குக் கற்பிக்கவேண்டும் என்ற முனைப்போடு சிலர் தாண்டிய பயங்கரவாதம் எதில் முடிந்தது? தமிழர்களின் உயிர், உடமை இழப்புக்கள் ஏராளம்! ஏராளம்!!

1981 ஆடி — மாவட்ட சபைத்தேர்தலைத் தொடர்ந்து வன்முறை தலை தூக்கியது. யாழ். நூல் நிலைய எரிப்பு உட்படப் பல துன்பங்கள், இழப்புக்கள்!

1983 ஆடி — யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடியில் இராணுவத்தினர் சிலர் உயிரிழந்ததைச் சாட்டாக வைத்துக் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் பயங்கரவாதம் தலைவிரித்தாடியது! மலையகப்பகுதித் தமிழர்களும் தப்பவில்லை.

"இன்றோடு தனியாட்டும் சுதந்திர தாகம்!" என்ற நினைப்போடு, இரகசியத் திட்டத்தோடு நடத்திய வன்செயல்களைக் கண்டு உலகமே அதிர்ச்சியடைந்தது!

"கருணையைப் போதிக்கும் மெளத்தர்கள் வாழும் நாட்டிலா இத்தகைய கொடூரங்கள்?" — மூக்கில் விரல் வைத்தார்கள் உலகப் பொது மக்கள்!

தமிழர்களின் உரிமைப் போருக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள் ஆறுவது திருத்தச் சட்டத்தின் மூலம்.

அதாவது — பிரிவினை கோரமாட்டோம் என நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட அனைவரும் சத்தியப் பிரமாணம் எடுக்க வேண்டும் எனச் சட்டம் சொல்லியது.

சீப்பை ஒளித்தால் கல்யாணம் நின்று போய் விடுமா?

முனைப்போடு தலை நிமிர்ந்தார்கள் இளைஞர்கள்; முற்றுப்புள்ளியை அழித்தார்கள்; காற்புள்ளியோடு தொடங்கி, அரைப்புள்ளியாகி, சிங்கள அரசிற்கு கேள்விக்குறியாகி. உலகத்தவருக்கு வியப்புக்குறியாகி விட்டார்கள்! இந்தியா போன்ற சில நாடுகளில் நடக்கும் பிரிவினைப் புரட்சிகளுக்கு இவர்கள் மேற்கோள் குறியாகியும் விட்டார்கள்!!

ஆடி நினைவுகள் புத்தூக்கம் தர வேண்டாமோ?

நல்லூர் கந்தசுவாமி கோவில்

# வருடாந்த உற்சவம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை காலை கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகி இருபத்தைந்து தினங்கள் நடைபெறும்.

உற்சவகாலங்களில் சுகாதார வசதிகளை யாழ். மாநகரசபையும், போக்குவரத்து காவல்பணிகளை காவல்துறையினரும், முதலுதவி வசதிகளை சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவும், ஆலய ஒழுங்குகளை இந்துமத அமைப்புக்களும் செய்துள்ளன.

24-7-93 கொடியேற்றம் (பகல் 10 மணி), 2-8-93 - மஞ்சம் (மாலை 5 மணி), 11-8-93 கார்த்திகை உற்சவம் (மாலை 5 மணி), 12-8-93 சந்தான கோபாலர் உற்சவம் (காலை 7 மணி), கைலாசவாகனம் உற்சவம் (மாலை 5 மணி), 13-8-93 கஜவல்லி மஹாவல்லி உற்சவம் (காலை 7 மணி), வேல் விமானம் (மாலை 5 மணி) 14-8-93 தெண்டாயுதபாணி உற்சவம் (காலை 7 மணி), 15-8-93 சப்பறம் (மாலை 5 மணி), 16-8-93 திருக்கல்யாண உற்சவம் (காலை 7 மணி) 17-8-93 செவ்வாய் தீர்த்த உற்சவம் (காலை 7 மணி) 18-8-93 பூங்காவனம் (மாலை 5 மணி), 19-8-93 வைரவர் உற்சவம் (மாலை 5 மணி)

(எஸ்)

யாழ். மாநகரசபையின்

# சோலைவரி அதிகரிப்புக்கு இடைக்கால தடை

(கொழும்பு)

யாழ். மாநகரசபையின் சோலைவரி 1993 முதல் 200 சதவீதமாக யாழ். மாநகர ஆணையாளரால் அதிகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து யாழ். மாநகரசபையின் முன்னாள் மேயர் எஸ். நாகராசா தொடர்ந்த வழக்கை பரிசீலனைக்கு எடுத்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அந்த அதிகரிப்பை நடைநிறுத்திவைக்குமாறு தடை உத்தரவு பிறப்பித்துள்ளது

நீதியரசர்கள் ஆனந்தக்குமாரசாமி, எதுசூரிய ஆகியோரின் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு வந்தபோதே நீதியரசர்கள் இந்த இடைக்கால தடைஉத்தரவை பிறப்பித்தனர்.

பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்ட நீதியரசர்கள் பதில் தாக்கல் செய்ய அக்டோபர் 6ம் திகதி வரை அவகாசம் வழங்கினர்.

மனுதாரர் நாகராசா தனது மனுவில் யாழ். மாநகரசபையானது 31-5-83 வரைதான் மக்களின் பங்களிப்புடன் கடைசியாக இயங்கியது. மேயர், துணைமேயர், அங்கத்தவர்கள் புதிதாக தெரிவுசெய்யப்பட்டபோதிலும் அவர்களால் இயங்க முடியவில்லை. அதைக் கலைக்கவும் அமைச்சர் நடவடிக்கைஎடுக்கவும்இல்லை.

1983 முதல் வடபகுதி மக்களின் அன்றாட வாழ்க்கை சீர்குலைந்துள்ளது. வைத்திய சுகாதாரவசதிகள்கிடையாது. மின்சாரம் இல்லை. நகரசுத்தி வேலையும் சிறிதளவே நடைபெறுகின்றது குழாய்நீர் விநியோகம், கழிவுகளை அகற்று

(4ம் பக்கம் பார்க்க)

# 'ஜெ'யின் உண்ணாவிரதம் எதனையும் சாதிக்கவில்லை

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, காவேரி தண்ணீர் தொடர்பாக மேற்கொண்ட உண்ணாவிரதத்தினால் எதிர்பார்த்தளவு எதனையும் சாதித்துவிடவில்லையென தமிழக எதிர்க்கட்சிகளும் அரசியல் அவதானிகளும் கருத்து தெரிவித்துள்ளனர்.

மத்திய அரசின் தயவின்றி மாநிலஅரசு எதையும்சாதித்து விட முடியாத கட்டத்தில் அகிம்சை போராட்ட மூலம் தமது நியாயத்தை வெளிப்படுத்த முற்பட்டார் ஜெயலலிதா. தமிழக மக்களின் நியாயமான கோரிக்கையை வெளியுலகிற்கு தெளிவுபடுத்த அவர் எடுத்த முயற்சி பாராட்டத்தக்கதுதான்.

கடந்த இரண்டு வருடங்களாக காவேரி நீர் தொடர்பாக நடுவர் மன்றம் வழங்கிய இடைக்காலதீர்ப்பை, மத்திய அரசு அமுல் படுத்தவில்லை. ஒரு சமயம் இந்த இடைக்கால உத்தரவை நடைமுறைப் படுத்துமாறு நீதிமன்றம் பிறப்பித்த ஆணையால் கர்நாடகத்தில் வொந்தளிப்பு ஏற்பட்டு பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் அங்கிருந்து தமிழகத்துக்கு விரட்டியடிக்கப்பட்டனர் அப்படியான ஒரு நடவடிக்கையில் மீண்டும் இறங்க மத்திய அரசு தயங்கிதயங்கி நடுவர் மன்ற தீர்ப்பை தள்ளிப் போட்ட வேளை செல்வி ஜெயலலிதா களத்தில் இறங்கி நியாயம் கேட்டார்.

அவரின் உண்ணாவிரதத்தை அடுத்து மத்திய அரசு அசைந்தும் கொடுத்தது முதல் மத்திய நீர்வள ஆணையாளர் எம். எஸ். ரெட்டி வந்தார். தொடர்ந்து மத்திய நீர்வள அமைச்சர் சுக்லாவேவந்தார். ஒருவாறு பேசி சமாளித்து செல்வி ஜெயலலிதாவுக்கு பழரசம் கொடுத்து உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொண்டனர்.

வடஇந்தியாவில் வெள்ளம் திரண்டு ஓடுகிறது. நதிகள் உடைப்பு எடுக்கிறது. நேற்று வரை வெள்ளநீருக்கு ஆயிரம் பேர் பலியானார்கள். ஆனால் தென்னகத்திலோ ஆற்றில் நீர் இல்லை பல இடங்களில் வரட்சி. தமிழகத்திற்கு காவிரி நீர் கிட்டாவிடில் இம்முறை பயிர் கருகி அழிவது உறுதி. இம்முறை வானமும்பொய்த்து விட்ட நிலையில் செல்வி ஜெயலலிதாவின் முயற்சி வெற்றியளிக்க வேண்டுமென ஆலயங்களில் பூசைகளும், மணி ஓசைகளும் பிரமாதம்.

ஆனால் மத்திய அரசு காலதாமதம் செய்யும் வழியில் ஒரு கண்காணிப்பு குழுவை அமைத்து கண்துடைத்து விட்டது. முதல்வரும் வேறு வழியின்றி ஒப்புக்கொண்டு விட்டார்.

இதேவேளை மத்திய அரசும் தமிழக அரசும் செய்துவந்த இப்போதைய உடன்படிக்கையை கர்நாடக முதல்வர் வீரப்பமொய்லி உடனடியாக நிராகரித்தும் விட்டார்.

அமைக்கப்படவுள்ள கண்காணிப்பு குழு காவிரிநீர் பிடிப்பு பகுதியில் மழைநீரின் அளவுகளை கணக்கெடுத்து இந்தக் கணக்கின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு நிபுணத்துவ பரிந்துரையை வழங்கும். இந்தமுடிவையே கர்நாடக முதல்வர் எதிர்க்கும்போது நடுவர்மன்ற தீர்ப்புப்படி காவிரி நீரை திறந்துவிடுவாரா?

மொத்தத்தில் செல்வி ஜெயலலிதா தான் மேற்கொண்ட உண்ணாவிரதம் வெற்றியென பெருமிதம் கொண்டாலும் எதிர்பார்த்த வெற்றியை ஈட்டவில்லையென்றே கூறலாம். (கே-ரி)

சிறுவர்

# போஷாக்கு பராமரிப்பு பூங்கா

ஆனைப்பந்தி,

விடுதலைப்புலிகள் அரசியல் துறையின் தீவக கோட்டத்தினரால் நாவற்குழி வைனிதா குடியிருப்பில் 'சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா' ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. -101

# வட-கிழக்கு புனரமைப்புக்கு 128 கோடி ரூபா அங்கீகாரம்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணங்களின் புனருத்தாரண - புனர் வாழ்வு நடவடிக்கைகளுக்காக பல குறைநிறை மதிப்பீடுகளுக்கு 128 கோடி ரூபாவுக்கு மேல் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி இராணுவ நடவடிக்கையினால் கூடுதலாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதற்கு 10 கோடி ரூபாவையும், இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு அவசர நிவாரணம் வழங்குவதற்காக 70 கோடி ரூபாவையும், சேதமடைந்த பொது வசதிகளை பழுதுபார்க்க 10 கோடி ரூபாவையும், அகதிகளை மீளக்குடி அமர்த்துவதற்காக 35 கோடி ரூபாவையும், இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகளின் புனர் வாழ்வுக்காக 8 கோடி 5 லட்சம் ரூபாவையும் செலவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் தெரிவித்தார். (வி)

## போதைப்பொருளுடன் இரு இலங்கையர் கைது

(சென்னை)

இரண்டு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளை கடத்தியதற்காக ஒரு பெண் உட்பட இரு இலங்கையர்கள் நேற்று முன்தினம் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமான மூலம் சென்னை விமான நிலையத்திற்கு வந்த இருவரையும் சுங்கப்பகுதியினர் சோதனையிட்டபோது அவர் இரண்டு கிலோ பெறுமதியான போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாம். -க

## நினைவுத் தூபியில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

1983 ஜூலைமாதம் 23ம் திகதி திருநெல்வேலி தபாற்பெட்டிச் சந்தியில் நடைபெற்ற வெற்றிகரமான கரந்தடித் தாக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் 13 பேரை அழித்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். செல்லக்கிளி அம்மானின் நினைவுத் தூபியில் இன்று காலை 9-00 மணிக்கு ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்படும்.

## வீரவணக்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வட்டப் பிரதேசத்தைச் சேர்ந்து 5ம் மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களை நினைவு கூர்ந்து திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் கோவில் முன்றலில் இன்று இரவு 7-30 மணிக்கு வீர வணக்கக் கூட்டம் நடைபெறும். இவ் வீரவணக்கக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கருத்துரையாற்றி நிறைவுறக் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## போட்டிப் பரீட்சை ஒத்திவைப்பு

(மானிப்பாய்)

இம் மாதம் 10ம், 11ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவிருந்த பதிவாளர் நாயகம், திணைக்களத்தின் பதிவாளர் சேவையின் இரண்டாம் தரத்திற்கு ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரசாங்க மாகாண உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (71)

## தொண்டர் ஆசிரியர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தின் கோட்டக் கல்வி அலுவலகத்தின் எழுத்து மூலமான அங்கீகாரத்துடன் 01 - 01 - 1989 ஆந் திகதியின் பின் தொண்டர் ஆசிரியர் நியமனம் பெற்று சேவையாற்றியவர்கள் அங்கீகாரக் கடிதங்களுடன் எதிர்வரும் 26 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு முன்னதாக யாழ். கல்வித் திணைக்களத்தின் ஆசிரியர் நிர்வாகக் கிளைக்குத் தவறாது சமுகந்தருமாறு கேட்கப்படுகின்றது.

அங்கீகாரக் கடிதங்களைத் தவறவிட்டவர்கள் தமது பாடசாலை அதிபரிடமிருந்து சேவைவிபரத்தைப் பெற்று அதை சம்பந்தப்பட்ட கோட்டக் கல்வி அலுவலகப் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் அத்தாட்சியுடன் கொண்டு வருமாறும் 26-ம் திகதியின் பின் இதுதொடர்பான எந்தவொரு கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## புலிகளை தோற்கடிக்க முடியாது

(கொழும்பு)

எந்த ஒரு இராணுவத்தினாலும் விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க முடியாது என்று கொழும்பிலுள்ள தமிழ்க்குழுவின் பிரமுகர் ஒருவர் கூறியுள்ளார். (வி)

### விசைப்படகு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வித அசம்பாவிதங்களினால், மீனவர்கள், கடலுக்குச் செல்ல அச்சமடைவதாக தெரியவருகின்றது. (160)

### மீனவர் மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது.

இதுபற்றி மீனவர்கள் இருவரும் தெரிவித்ததாவது:

நாம் வழமைபோல் மீன் பிடிப்பதற்காக இயந்திரப் படகில் நேற்று முன்தினம் மாலை கடலுக்கு சென்றோம்.

எதிர்பாராத விதமாக அங்கு வந்த ஸ்ரீலங்கா கடற்படையினர் நமது படகு மீது பிரயோகித்தார்கள். 50 கலிபர் துப்பாக்கித் தாக்குதலையும் மேற்கொண்டபோது அச்சமடைந்த நாம் உயிராபத்தை பொருட்படுத்தாது கடலில் குதித்தோம்.

கடலில் குதித்து நாமிருவரும் சுமார் 13 மணித்தியாலங்கள் உடைமைகளை இழந்த நிலையில் கரையை வந்து சேர்ந்தோம். (160)

### இளம் தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இப்பெண்ணை கடும் சித்திரவதை செய்ததில் இவரின் கைமூட்டு மூன்றுள்ளதாகவும் இவரின் காது மூக்கு என்பன காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

### போரை கட்டுப்படுத்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன, மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, முன்னாள் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி, ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஆகியோர் இந்தக் காலப்பகுதியிலேயே பலியானார்கள்.

எனவே வடக்கு கிழக்கு யுத்தம் இன்று ஒரு சுகலைக்கிடமான உருவைப் பெற்றுள்ளது என அந்த விமர்சகர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

### அரசியல் தீர்வு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படாதவரை நாடு துண்டாடப்படுவது தவிர்க்க முடியாத தொன்றாகிவிடும் என்று திரு. ஹரிகுணதிலக்கா கூறியுள்ளார். (வி)

### யாழ். மாநகரசபையின்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வது. போன்ற சேவைகள் கூட மாநகரசபையால் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் ஆணையாளர் 200 வீதம் சோலை வரியை அதிகரித்துள்ளார். அவர் எடுத்த இந்த முடிவுக்கும் அதனை அவர் அமுல்படுத்துவதற்கும் தடைவிதிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

மனுதார் சார்பில் சட்டத்தரணி கே.வி. மகேந்திரன், எம். மகேந்திரன் ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணி எஸ். குலரசா ஆஜரானார். (ம)

### கைதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் கையளித்ததாக யுத்தக் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடிதத்தின் மேலதிக பிரதிகளை அரச அதிகாரிகளிடம் தாம் கையளிக்கப்போவதாகவும் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 14-ம் திகதி மேற்படி யுத்தக் கைதிகளால் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட விருந்ததும் பின்னர் அது ஒத்திவைக்கப்பட்டதும் தெரிந்ததே. (க)

### நெருக்கடிகால

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போன்று இன்றைய் பரிமாறுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச் சேவையானது பொது மக்களின் நன்மை கருதியே ஆரம்பிக்கப்பட்டது என்பதனை கருத்திற்கொண்டு தவறான வழிகளைக் கையாண்டு செய்திகள் பரிமாற்றம் செய்ய முற்படுபவர்கள் இவ்வாறான தவறான வழிகளை கையாள்வதனைத் தவிர்த்து சேவை நல்ல முறையில் செயற்பட ஒத்துழைக்கும் வண்ணம் கேட்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தவறான முறையில் செய்திகள் கையளிப்போர் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும் என்பதனை யோக்கு வரத்து கண்காணிப்பு பிரிவு பொதுமக்களுக்கு அறியத் தருகின்றது.

## சீமெந்து ஊழியரின் அலவன்ஸ் உடன் வழங்க உத்தரவு

(மானிப்பாய்)

காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு ஆபத்து அலவன்ஸை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பதில் வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் சந்திரா ரணதுங்கா சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பணித்துள்ளார்.

கடந்த வாரம் மேற்படி அமைச்சரை சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர் சங்கப் பிரதி நிதிகளும் தமிழ் எம். பிக்கள் இருவரும் சந்தித்து பொது நிர்வாக சுற்றறிக்கை யின்படி இத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஆபத்து அலவன்ஸ் கடந்த ஒன்றரை வருட காலமாக வழங்கப்படவில்லை யென்று சுட்டிக் காட்டினர்.

இதனையடுத்து இவ்வூழியர்களுக்கு ஒரு வார காலத்தினுள் ஆபத்து அலவன்ஸை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சீமெந்து தொழிற்சாலையின் எதிர்காலம் தொடர்பாக வெளிநாடு சென்றுள்ள வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேனகூரே நாடு திரும்பியதும் தீர்மானிக்கப்படும் எனத் தெரிய வருகிறது (71)

## ஒட்டகப்புலம் ராணுவ காவலரண் மீது புலிகள் தாக்கு

(யாழ்ப்பாணம்)

ஒட்டகப்புலம் இராணுவ காவலரணின் உட்புறத்தில் அணுவகுப்பில் சுடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் காலை 8-45 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்படி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன்போது ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றிய தகவல் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. (க)

# குமண கப்பலில் அரிசி, சீனி வந்தன

(நெல்லியடி)

குமண கப்பல் நேற்றுக் காலை 8 மணிக்கு பருத்தித் துறைக்கு வந்தது.

இதில் யாழ். மாநகர சபைக்கு 50 சைக்கிள்களும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு 100 சைக்கிள்களும், 1000 மெ.தொன் அரிசி, சீனி, 647 மெ. தொன் மைசூர் பருப்பு, பயறு, டீசல், மிளகாய், தேயிலை, அத்துடன் யோரும் நிறுவனத்திற்கு நீரிறைக்கும் இயந்திரம், டச்சு, மண்ணெண்ணெய் 2 பரல், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு சீமெந்து, யாழ். சுகாதாரப் பணிமனைக்கு மருந்துகள், ஊசிகள், யாழ். பல்கலைக்கழகத்திற்கு எரிபொருள், யாழ். கல்வித் திணைக்களத்திற்கு பாடப்புத்தகங்கள், யாழ். ஹட்டன் நஷனல் வங்கிக்குரிய உபகரணங்கள் போன்றவைகளும் வந்துசேர்ந்தன.

### பூநகரிப்பாதை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றி பத்திரிகையாளர் கேள்வி எழுப்பிய போதே திரு. பிரமன் வீரக்கோன் மேற்கண்டவாறு கூறினார். (வி)

### ஜனாதிபதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கணக்கானோர் வீதிகளில் இராந்து செல்கின்றார்கள். மட்டுநகரிலுள்ள பாரிய கட்டிடங்களிலும் பெரிய மரங்களிலும் இராணுவம் இரவு-பகலாக காவல் புரிந்து வருகின்றது.

சோதனை நிலையங்களில் தமிழ்மக்கள் முற்றாகச் சோதனை செய்யப்படுகிறார்கள். பலர் தினமும் கைது செய்யப்படுகின்றார்கள். இரவு நேரங்களில் தமிழ் மக்கள் வீதிகளுக்கு வருவதற்கு அஞ்சி வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் இப்பகுதிகளில் எந்த நிமிடமும் நடைபெறலாம் என்ற அச்சத்தில் பொலிசாரும் இராணுவத்தினரும் கண் விழித்தவண்ணமே தமது நேரத்தை போக்கிவருகின்றார்கள்.

நடுநிசியில் ஆயுதப் படையினர் பொதுமக்கள் வீடுகளுக்கு திடீர் திடீர் என சென்று சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாகியிருக்கின்றனர் எனவும் பி.பி.ஸி. நிருபர் மேலும் தெரிவித்துள்ளார். (வி)

### 10 ஆண்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தினால் நாட்டின் ஒற்றுமை உறுதியற்ற நிலைக்கு தள்ளப்பட்டு விட்டதாக அரசியல் அவதானிகள் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

உளவியல் ரீதியில் 1983ம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் இலங்கையிலிருந்து பிரிந்துவிட்டது. அதன் பின்பு சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்துக்கு செல்வதற்கு அஞ்சுகின்றார்கள்.

பொருளாதார ரீதியில் பெரும்பான்மையாக தமிழர் வாழும் யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து அரசுக்கு எதுவித வருவாயும் வருவது கிடையாது. இதேபோன்று அரசின் பொருளாதாரத் திட்டத்திலும் யாழ்ப்பாணப்பகுதி இடம்பெறுவதில்லை என்று அரசியல் விமர்சகர்கள் மேலும் தெரிவித்துள்ளார்கள். (வி)

### 1983 ஜூலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தம் தரித்த படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

நகருக்குள் செல்லும் வாகனங்கள் யாவும் படையினரால் நுணுக்கமாக பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த சில தினங்களாக கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இது தொடர்பாக பாதுகாப்பு படையினர் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதில் பல தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

1983-ம் ஆண்டு ஜூலை 23-ம் திகதி யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் பலியானார்கள். இதனையடுத்து நாடளாவிய ரீதியில் இனக்கலவரம் ஏற்பட்டது. இதில் ஆயிரக்கணக்கில் தமிழர் கொல்லப்பட்டதும், கோடிக்கணக்கான பெறுமதிவாய்ந்த தமிழரின் சொத்துக்கள் அழிக்கப்பட்டதும் தெரிந்ததே. (ஐ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post Office, Sri Lanka under Licence Number B/10336/B